திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 17.05.2026

## தாய் மனம்..!

மகனைப் பார்த்து அம்மா கேட்டார்,
" மகனே. எனக்கு திடீரென கண் பார்வை போய்விட்டால், நீ என்ன செய்வாய்? சொல் பார்க்கலாம்..." என்று விளையாட்டாக கேட்க,

மகன் சொன்னான், " உடனே உங்களை ஒரு நல்ல கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பேன் அம்மா" என்று.

" அங்கே எனக்கு கண் பார்வையை மீட்டுத் தர முடியாமல் போனால். நீ என்ன செய்வாய்?" என்று அம்மா கேட்க..

" உலகத்திலேயே மிகச்சிறந்த கண் மருத்துவமனைக்கு உங்களை அழைத்துச் செல்வேன் அம்மா" என்று சொன்னான் மகன்.

" ஒருவேளை அவர்களுடைய சிகிச்சையும் பலன் தராவிட்டால் என்ன செய்வாய்?" என்று தாய் சிரித்துக் கொண்டே கேட்டார்.

" ஆயுள் முழுவதும் என்னுடன் உங்களை வைத்துக் கொண்டு கண்ணுக்கு கண்ணாக காப்பாற்றுவேன் அம்மா." என்றான் மகன்.

அம்மா சற்று புன்னகைத்தபடியே சொன்னார், "மிக்க நன்றி மகனே.." என்று .

இப்பொழுது மகன் அம்மாவைப் பார்த்து கேட்டான், " அம்மா.. ஒருவேளை எனக்கு கண் பார்வை திடீரென பறிபோனால் நீங்கள் என்ன செய்வீர்கள்? சொல்லுங்கள் பார்ப்போம்" என்று .

அம்மா சற்றும் தயங்காமல், தெளிந்த புன்னகையோடு மகனின் தோள் மீது தன் கைகளை வைத்து, " என் கண்களை உனக்கு உடனே தருவேன் " என்று சொல்ல

தாயின் கால்களை இறுகப்பற்றிக் கொண்டான் மகன்.